දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister 2784832 2784807 2785617
ලේකම් / செயலாளர் / Secretary 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office 2785141-50 Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல.
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.

ඔබේ අංකය / உமது இல. / Your No.

මගේ අංකය / எமது இல / My No. ED/01/12/02/06/02

දිනය / திகதி / Date 2010.08.26

சுற்று நிருபம் இல 2010/27

சகல மாகாணக்கல்விச் செயலாளர்

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்

கோட்ட பிரதி / உதவி கல்விப் பணிப்பாளர்

பாடசாலை அதிபர்

## <u>இடைநிலை தரம் (6-11) ஆன கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்</u>

இடைநிலை வகுப்புக்களுக்கான (6-11) கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றிய இதற்கு முன் 2006.03.07 திகதி இல 2006/09 சுற்று நிருபம், 2007.03.07 திகதி இல 2007/06, 2008.04.21 திகதி இல 2008.:.12, 2008.09.15 திகதி இல 2008/12 (1) ஆகிய சுற்று நிருபங்களின் திருத்தங்களுடன் மேலதிகமாக இச்சுற்று நிருபமும் இனிமேல் நடைமுறையில் இருக்கும்.

**இடைநிலை வகுப்புகளில் நடைமுறையிருக்கும் <u>இருமொழி</u> மூல கல்வி வேலைத்திட்டம்**

இருமொழிமூல கல்வி வேலைத்திட்டத்திற்கு ஏற்ப 2008/12, 2008/12 (1) ஆகிய விதிமுறைகளுக்கு உங்களது கவனத்தை ஈர்ப்பதுடன், கீழ் காணப்படும் விதிமுறைகளும் இதற்கு பின் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

02. 2008/2 சுற்று நிருபத்தில் 4.3 பகுதியில் குறிப்பிட்டுள்ளதன்படி தெரிவு செய்யப்பட் பாடங்கள் பாடசாலையில் 6 ஆம் தரத்தில் இருக்கும் மாணவர்களிடையேயிருந்தே ஆங்கில மொழிமூலம் கற்பதற்காக தெரிவுசெய்யப்பட வேண்டும்.பாடசாலை அனுமதிக்காக இருமொழி மூல வகுப்புத் தெரிவைபயன்படுத்த இடமளிக்க வேண்டாம்.

03. இவ்வமைச்சினால் அனுமதிக்கப்படும் புலமைப்பரிசில் சித்தியடைந்தவரகள் உட்பட 6 ஆம் தரத்தில் இருக்கின்ற மாணவர்களுக்கிடையேயிருந்து மாத்திரம் இருமொழி வேலைத்திட்டத்திற்கான மாணவர்களை தெரிந்தெடுக்க வேண்டும்.அவ்வாறே இருமொழிமூல மாணவர்கள்போதுமானளவு இல்லாதவிடத்திலும் குறிப்பிட்ட பாடசாலைக்கு அனுமதிப்பது தொடர்பாக தீர்மானிக்கப்பட்ட புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளியை விடகுறைந்தபுள்ளிகளை பெற்ற மாணவர்களையோ அல்லது புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றாத மாணவரையோ போட்டிப் பரீட்சையினை நடத்தியோ நடாத்தாமலோ இருமொழிமூல கற்கைநெறிக்கு தெரிவு செய்யக் கூடாது என்பததை அறிவுறுத்துகிறேன்.

04. 7 ஆம் தரத்திற்கான இருமொழிமூல மாணவர்களாக ஏனைய பாடசாலைகளில் இருமொழிமூலமல்லாத மாணவர்களை அனுமதிக்ககூடாது. இருமொழிமூல மாணவர்களது பெற்றோர்இடமாற்றம் அல்லது சொந்த அனுமதி கோரும் பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்கு மாற்றம் செய்தால் மட்டுமே அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

05. 2 ஆம் மொழிக் கல்வி வேலைத்திட்டம் தொடர்பாக மாகாண, வலய மட்டங்களில் 2 ஆம் மொழிக் கல்விக்கான இணைப்பு உத்தியோகத்தர்கள் இருப்பதுடன், அவர்களது உதவியுடன் இச்சுற்று நிருபமும் இதற்கான ஏனைய சுற்று நிருபங்களினதும் விதி முறைகளின்படி பாடசாலைகள் சரியான முறையில் செயற்படுகின்றனவா என்பதை ஆராய்ந்து பார்ப்பதுவும் அப்படி நடைபெறாத சந்தர்ப்பங்களில் ஏற்ற ஒழுங்கு நடவடிக்கைகளை எடுப்பதுவும் மாகாண, வலய கல்விப்பணிப்பாளர்களது பொறுப்பாகும்.

சுனில் எஸ். சிறிசேன
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்

1. தேசிய கல்வி ஆணைக்குழுத் தலைவர்
2. தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம்
3. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர்
4. பரீட்சை ஆணையாளர் நாயகம்
5. கல்வி வெளியீட்டு ஆணைக்குழுத் தலைவர்
6. கணக்காளர் நாயகம்
7. கல்வி அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்
8. அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை தலைவர்கள்